**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 181 /2016

PW- 3 20-09-2024

| | |
|---|---|
| Name | சத்தியஜோதி |
| Father's/Husband's Name | மாரியப்பன் |
| Village | கோவில்பட்டி |
| Taluk | கோவில்பட்டி |
| Caste | – |
| Calling | தலைமைக்காவலர் |
| Religion | – |
| Age | 39 |

(A1 to A3 absent. Petition filed and allowed)

<u>**முதல்விசாரணை**</u>

1) நான் கோவில்பட்டியில் வசிக்கிறேன். நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். 21.04.2016 தேதி எதிரிகளுக்கும் குமார் என்பவருக்கும் கோவில் சம்மந்தமாக பிரச்சனை நடந்தது. குமார் வீட்டில் இல்லை என்பதால் அவரை தேடிக்கொண்டு என் மாமியார் வீட்டிற்கு எதிரிகள் வந்தனர்.

2) செருப்பு காலுடன் வீட்டிற்குள் வந்தார்கள். எனக்கு 2வது குழந்தை பிறந்து சுமார் 8 மாதங்கள் ஆகி இருந்தன. என் மனைவி குழந்தையை கையில் வைத்திருந்தபோது அவரை இடித்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றனர்.

3) வீட்டிற்குள் தேடிப்பார்த்துவிட்டு வெளியே வரும்போது செருப்புக்காலுடன் ஏன்டா வருகிறீர்கள் என்று என் மனைவி கேட்டார். அப்படித்தான் வீட்டிற்குள் வருவோம் என்று 2 பேர் காலால் எட்டி உதைத்துவிட்டு போனார்கள். என் மாமியார் அங்கு நின்றிருந்தார்.

4) என் மனைவியும் மாமியாரும் வீட்டிற்கு வெளியே வந்து 3 வது எதிரியிடம் நடந்ததை பற்றி கூறியபோது என் மகனிடம் கேட்பதற்கு நீ யெல்லாம் ஒரு ஆளா என்று கேட்டார். நாங்கள் 3 பேரும் நினைத்தால் உன் புருஷனை கொன்றுவிட்டு போய்விடுவோம் என்று கூறினார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) ஏப்ரல் 21, 22, 23 ஆகிய தேதிகளில் விடுமுறை பெற்று திருவிழாவிற்காக வந்தேன் . அதன்பின்பு விடுமுறை நாளை நீட்டித்துக்கொண்டேன். சென்னையில் இருந்து 20ம் தேதி இரவு கிளம்பி 21ம் தேதி காலையில் கோவில்பட்டிக்கு வந்தேன்.

2) மேற்சொன்ன 3 நாட்களில் விடுமுறையில் தான் இருந்தேன் என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

3) புகார்மனுவை நான் எழுதினேன். என் மனைவி படித்து பார்த்து கையெழுத்து போட்டார். புகார்மனுவை காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். புகார்மனுவை காவல்நிலையத்தில் வைத்து எழுதும்போது இரவு சுமார் 8 மணி இருக்கும்.

4) புகார் மனு கொடுப்பதற்கு முன்பு 8 வருடமாக காவல்துறையில் பணிபுரிந்து வந்தேன். பொதுவாக புகார்மனு கொடுப்பவருடன் வருபவர்கள் புகார்மனுவில் அறிவேன் சாட்சி கையொப்பமிடுவது வழக்கம் என்றால் சரிதான்.

5) நான் வழக்கின் புகார்மனுவில் அறிவேன் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான், அதற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. கையெழுத்து போட்டால் என் மனைவி உடன் வந்த விபரம் தெரியவரும் என்பதால் கையெழுத்து

போடவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவருக்கு எழுத படிக்க தெரியும்.

6) என் மனைவி புகார்மனுவை எழுதாததற்கான காரணம் அவர் அடிபட்டு சிசிக்சை பெற்று வீட்டிற்கு வந்து நிலையம் சென்றதால் அவர் புகார் மனுவை எழுதவில்லை. பொதுவாக மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்பவர்கள் மருத்துவர் டிஸ்ஜார்ச் செய்தால் மட்டும் தான் வெளியே செல்வர் என்றால் சரிதான்.

7) என் மனைவி மருத்துவமனையில் இருந்து டிஸ்ஜார்ச் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் மனைவியை மருத்துவமனையில் இருந்து மாலை சுமார் 6 மணியளவில் வீட்டிற்கு அழைத்து சென்றேன்.

8) நான் முதல் விசாரணையில் சொன்னது போல் என் மனைவிக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால் என் மனைவியை மருத்துவருக்கு தெரியாமல் வீட்டிற்க அழைத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, அவருக்கு காயம் ஏற்படவில்லை வலி இருந்தது சிகிச்சை பெற்றுவிட்டு மாலையில் வீட்டிற்கு அழைத்து சென்றேன்.

9) என் மனைவிக்கு வலி இருந்ததாக நான் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. கருமாரியம்மன் கோவிலில் முதல் மரியாதை கொடுப்பது சம்மந்தமாக பிரச்சனை என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன். கருமாரியம்மன் கோவில் இருளப்பன் மகன் பசுபதி வகையறாவிற்கு சொந்தமான கோவில் .

10) குமார் மேற்படி பசுபதி வகையறாவிற்கு உறவினறா என்பது எனக்கு தெரியாது. எதிரிகளின் வீட்டிற்கு எதிரே குமார் குடியிருந்து வருகிறார். கருமாரியம்மன்

கோவிலில் இன்றுவரை யாருக்கும் முதல்மரியாதை கொடுக்கும் வழக்கம் இல்லை என்றால் சரியல்ல.

11) பிரச்சனை சம்மந்தமாக குமார் காவல்நிலையத்தில் எந்த புகார் மனுவும் கொடுக்கவில்லை. நான் சொன்னமாதிரி சம்பவம் நடந்ததிருந்தால் குமாரும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்திருப்பார் என்றால் அவர் புகார் கொடுப்பதற்கும் என் மனைவி தாக்கப்பட்டதற்கு எந்த சம்மந்தமும் இல்லை.

12) புகார்மனுவில் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் நான் வீட்டில் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னமாதிரி சொன்னநாளில் சொன்னநேரத்தில் 1, 2 எதிரிகள் செருப்புக்காலுடன் என் மாமியார் வீட்டிற்குள் நுழைந்து என் மனைவியை எத்தி தள்ளிவிட்டு போனார்கள் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. என் மனைவியை பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

13) அசா 1 என் மனைவி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்துறையில் பணிபுரிவதால் என் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்க வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

*(ஒம்)* B.*பீட்டர்*, M.A.B.L.
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.